## වර්තමන්

# අර්බුදයට විසඳුම

## අ.වි.ශි.බ.ම යෝජනාවලිය

## தற்போதைய

# நெருக்கடிக்குத் தீர்வு

## அ.ப.மா.ஒ. முன்மொழிவு


අන්තර් විශ්වවිද්‍යාලයීය ශිෂ්‍ය බලමණ්ඩලය

INTER UNIVRSITY STUDENTS FEDERATION

පාලකයන් විසින් මෙරට ජනතාව බරපතල ආර්ථික, සමාජීය, දේශපාලන අර්බුදයක ගිල්වා දමා ඇති රට පුරා ක්‍රියාත්මක වන දැවැන්ත මහජන අරගලය එම අර්බුදය විසින් ඇති කළ ජනතා පීඩනය පුපුරා යාමකි. පාලකයන්ගේ වැඩපිළිවෙළ තුළ අර්බුදයට විසඳුම් පෙනෙන තෙක්මානයක නොමැති අතර අර්බුදය තීව්‍ර වීමත් ජනතා පීඩනය උග්‍ර වීමත් දිනෙන් දින වර්ධනය වෙමින් පවතී. අර්බුදයට විසඳුම් පාලකයන් සතුව නොමැති වුවද පීඩනයට එරෙහිව ක්‍රියාත්මක වන ජනතා අරගලය සිය බල ව්‍යාපෘතීන් වෙනුවෙන් කොල්ලකා ගැනීමට සැලසුම් ඔවුන් සතුව ඇත. ඒ සඳහා කිසිත් ඉඩදිය නොහැකි අතර අරගලයේ දිශානතිය පිළිබඳ පුළුල් මහජන සංවාදයක්, දැක්මක් ඇති විය යුතුය. ජනතා අරගලය තවත් සරල බල මාරුවකින් කෙළවර නොවී සමාජ, ආර්ථික දේහයේ පුළුල් පරිවර්තනයක් කරා ගමන් කළ යුතුයි. ඒ සඳහා අත්‍යවශ්‍ය ප්‍රවේශයක් වශයෙන් මේ මොහොතේ ක්‍රියාත්මක වන ජනතා අරගලය පහත ජයග්‍රහණයන් අත්පත් කරගන්නා තෙක් අඛණ්ඩව ක්‍රියාත්මක විය යුතුය.

## 1. ගෝඨාභය රාජපක්ෂ පලවාහැරීම හා විධායකය අහෝසි කිරීම.

ජන මතයට හිස නමා ගෝඨාභය රාජපක්ෂ ජනාධිපතිවරයා ඇතුළු ජනතා ද්‍රෝහී ආණ්ඩුව වහා ඉල්ලා අස්විය යුතුයි. ඒකාධිපති උම්මන්තකයන් බිහි කරන විධායක ජනාධිපති ක්‍රමය මුළුමනින්ම අහෝසි කළ යුතු අතර එය අත්‍යවශ්‍ය හදිසි කටයුත්තක් ලෙස සලකා සිදු කළ යුතුයි.

## 2. ජනතාවට බලය පැවරෙන නව ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවක්.

පාලකයන් විසින් නිර්මාණය කරන ලද ආර්ථික, දේශපාලන හා සමාජීය අර්බුදය විසඳීමට පවතින ආණ්ඩු ක්‍රම ව්‍යවස්ථාව කිසිසේත් සමත් නැත. එහෙයින් මහජන අභිලාෂයන් ඉටු කළ හැකි, තීරණ ගැනීමේ බලය ජනතාවට පැවරෙන නව ආණ්ඩු ක්‍රම ව්‍යවස්ථාවක් සකස් කිරීම අත්‍යවශ්‍ය වේ. ඒ සඳහා මහජනතාවගේ අදහස්, යෝජනා රැගෙන නව ව්‍යවස්ථා කෙටුම්පතක් සකසා එය පුළුල් මහජන සංවාදයකට විවෘත කර ජනතා අනුමැතිය ලබාගත යුතුය. එම නව ව්‍යවස්ථාව මගින් ආර්ථික සාධාරණත්වය, අධ්‍යාපනය, සෞඛ්‍ය ජනතාවගේ මූලික අයිතීන් ලෙස පිළිගත යුතුය.

## 3. දේශපාලකයන් විසින් සොරාකන ලද ධනය යළි අත්පත් කරගැනීම.

1977 න් පසු මෙරට පාලනය කළ, දේශපාලකයන් ලෙස කටයුතු කළ සියලු දෙනාගේත්, රජයේ අතිශය සංවේදී තනතුරු හෙබවූ ඉහළ නිලධාරීන්ගේත් වත්කම් බැරකම් පිළිබඳ අපක්ෂපාතී පූර්ණ විමර්ශනයක් සිදුවිය යුතුය. සොරාගත් ධනය, දේපල නැවත පවරාගත යුතුය. මහජන මුදල්, දේපල කොල්ල කෑ සියල්ලන්ට දඬුවම් පැමිණවිය යුතුය.

## 4. ඝාතන සහ අතුරුදන් කිරීම්වලට යුක්තිය ඉටු කිරීම.

රාජපක්ෂ පාලනය ඇතුළු දේශපාලන මැදිහත්වීම් මත පසුගිය දශක කිහිපය තුළ සිදු කෙරුණු සියලු මනුෂ්‍ය ඝාතන, පුද්ගල පැහැරගැනීම්, අතුරුදන් කිරීම් පිළිබඳ පූර්ණ විමර්ශනයක් සිදුකළ යුතු අතර වින්දිතයන්ට යුක්තිය ඉටු කිරීමත් වැරදිකරුවන්ට දඬුවම් පැමිණවීමත් සිදු කළ යුතුය.

## 5. ගජමිතුරු සමාගම් විසින් පැහැර හරින ලද බදු මුදල් නැවත අයකරගැනීම.

2015 සිට 2019 වසර දක්වා මෙරට ඉහළ ම ආදායම් ලබන සමාගම් පැහැර හැර ඇති බදු ප්‍රමාණය රුපියල් කෝටි 41440 කි. 2020 වසර තුළ පමණක් රුපියල් කෝටි 1050 ක් බදු නොගෙවා පැහැර හැර තිබේ. සීනි බදු වංචාවෙන් රජයට අහිමි වූ මුදල් ප්‍රමාණය රුපියල් කෝටි 1600 කි. මේ උදාහරණ කීපයක් පමණි. මෙම බදු පැහැර හැරීම් පිළිබඳව පූර්ණ විමර්ශනයක් සිදුවිය යුතු අතර වහාම පැහැර හැරී

බදු මුදල් අය කරගැනීමට කටයුතු කළ යුතුය. මෙරට සමස්ත බදු ආදායමෙන් 85% ක ප්‍රමාණයක් අය කරගන්නේ වක්‍ර බදු ලෙස සාමාන්‍ය ජනතාවගෙන් වන අතර ආදායම් උපයන මහාපරිමාණ සමාගම් හිමියන් දරන්නේ සමස්ත බදු බරෙන් 15% ක සුළු ප්‍රතිශතයක් පමණි. සිදුවිය යුත්තේ මෙහි ප්‍රතිපක්ෂය වන අතර සෘජු බදු 80% - 85% දක්වා වැඩි කර වක්‍ර බදු 15% - 20% ප්‍රමාණයට අඩු කළ යුතුය. එලෙස සෘජු බදු අය කරගැනීම සඳහා අනුක්‍රමික බදු ප්‍රතිපත්තියක් හඳුන්වාදිය යුතුය.

**6. ගජමිතුරු සමාගම් විසින් කොල්ලකාගත් මහජන ධනය යළි අත්පත් කරගැනීම.**

මෙරට ප්‍රධාන පෙලේ සමාගම් කිහිපයක් ඉතිහාසයේ අන් සෑම වර්ෂයකම ලැබූ වාර්ෂික ආදායම් සීමාව කිහිප ගුණයකින් ඉක්මවමින් 2020 වර්ෂයේ අධික ලාභයක් උපයාගෙන තිබේ. කොටස් වෙළඳපොල ලයිස්තුගත සමාගම්වලින් ඉහළම ආදායම් ලබන සමාගම් සියය 2020 වසරේ රුපියල් බිලියන 200 ක ශුද්ධ ලාභයක් උපයාගෙන ඇත. මෙරට ධනවත්ම සමාගම් 09 පමණක් 2020 වසරේ ලබාගත් ආදායම රුපියල් බිලියන 891 කි. 2020 වසරේ ඉහළම ආදායම් ලැබූ සමාගම් හතරෙහි වත්කම් මේ වන විට රුපියල් ට්‍රිලියනය ඉක්මවා තිබේ. 2020 යනු කෝවිඩ් වසංගතය හේතුවෙන් ආදායම් මාර්ග අහිමිව මෙරට ජනතාවගෙන් සැලකිය යුතු බහුතරයක් දරිද්‍රතාවයේ පතුළට ඇද වැටුණු වසරයි. එසේ තිබියදී සමාගම් කිහිපයක් අධික ලාභ ඉපයීමත්, සමස්ත සමාජයක් සතු විය යුතු ධනය පුද්ගලයන් කිහිප දෙනෙකු අත සංකේන්ද්‍රණය වී තිබීමත් පිළිබඳ විධිමත් විමර්ශනයක් කළ යුතුය. එම සමාජ ධනය අවශ්‍යතාව පරිදි නැවත ජනසතු කොට ජනතා අවශ්‍යතා ඉටු කිරීම සඳහා යෙදවීම අත්‍යවශ්‍ය කරුණක් සේ සලකා සිදු කළ යුතුය.

**7. විමර්ශන සඳහා මහජන කොමිසමක්.**

ඉහත විමර්ශන සඳහා තවදුරටත් විධායකය, ව්‍යවස්ථාදායකය මැදිහත්ව සකසන ජනාධිපති - පාර්ලිමේන්තු කොමිසන් සභා වැනි ව්‍යුහයන් මත විශ්වාසය තැබීම කළ නොහැකිය. එහෙයින් ඒ සඳහා මහජන කොමිසමක් පත් කළ යුතුය. අරගලයත් සමඟ ගම්, නගර සහ වැඩබිම් මට්ටමින් ගොඩනැගෙන ජනතා සංවිධාන, දැනටමත් පවතින වෘත්තීය සමිති, බහුජන සංවිධාන, සිවිල් සංවිධාන, ශිෂ්‍ය ව්‍යාපාරය, ගොවි - ධීවර සමිති හා වෙනත් ප්‍රාදේශීය සංවිධානවලින් නියෝජිතයන් තෝරාගෙන මෙම මහජන කොමිසම පත් කළ යුතු අතර සියලු විමර්ශන කටයුතු සිදු කිරීම සඳහා එම කොමිසමට බලය පැවරිය යුතුය.

**8. අත්‍යවශ්‍ය භාණ්ඩ හා සේවා මිල තීරණය කිරීම සඳහා ජනතා යාන්ත්‍රණයක්.**

ඉන්ධන, ගෑස්, කිරිපිටි, සහල් ඇතුළු අත්‍යවශ්‍ය භාණ්ඩ හා සේවා මිල ගණන් තීරණය කිරීම සිදුකරන්නේ සීමිත සමාගම් ජාලයක උවමනා එපාකම් අනුවය. එය ජනතාවගේ මූලික අයිතීන් උල්ලංඝණය කෙරෙන අතිශය අසාධාරණ ක්‍රියාවලියක් වන අතර මිල තීරණය කිරීම සඳහා සමාගම් සතුව පවතින ඒකාධිකාරී බලය අහෝසි කළ යුතුය. ඒ වෙනුවට වෘත්තීය සමිති, බහුජන සංවිධාන, කාන්තා සංවිධාන, ගොවි - ධීවර සමිති, ශිෂ්‍ය සංවිධාන ඇතුළු මහජනතාව සෘජුව දායක වන යාන්ත්‍රණයක් මගින් අත්‍යවශ්‍ය භාණ්ඩ හා සේවාවල මිල තීරණය කෙරෙන නව යාන්ත්‍රණයක් සකස් කළ යුතුය.

**9. ජනතාවට සහන සලසන කඩිනම් වැඩපිළිවෙලක්.**

අත්‍යවශ්‍ය ආහාර ද්‍රව්‍ය, ඉන්ධන, ගෑස් ඇතුළු භාණ්ඩ හා සේවා හිඟය සහ දරාගත නොහැකි තරමට

මිල ගණන් ඉහළ යාම විසින් ජන ජීවිතය බරපතල අර්බුදයකට ඇද වැටී තිබේ. මේ සඳහා ජනතාවට සහන සලසන කඩිනම් වැඩපිළිවෙලක් අවශ්‍ය වන අතර ජීවන වියදම වහා පහත හෙළිය යුතුය. ණය වාරික කපාහැරිය යුතු අතර ජීවන වියදමට සරිලන පරිදි ජනතාවගේ ආදායම් හා වැටුප් තල ඉහළ දැමිය යුතුය.

## 10. සාධාරණ නව ආර්ථික ක්‍රමයක්.

1977 න් පසුව මෙරට බිහිවූ සියලුම ආණ්ඩු ආර්ථිකය මෙහෙයවන ලද්දේ ජාත්‍යන්තර මූල්‍ය අරමුදල (IMF), ලෝකබැංකුව වැනි අධිරාජ්‍යවාදී මූල්‍ය සංවිධානවල මඟපෙන්වීම්, උපදෙස් හා කොන්දේසිවලට අනුවය. එබැවින් වත්මන් ආර්ථික අර්බුදයට මෙරට පාලකයන් වගකිව යුතු තරමටම මෙම මූල්‍ය සංවිධානද ඒ සඳහා වගකිව යුතුය. අර්බුදයට තාවකාලික පිළියම් වීමට ජාත්‍යන්තර මූල්‍ය අරමුදල (IMF) වැනි සංවිධානවල පිහිට පැතීමෙන් සිදුවන්නේ තවදුරටත් ණය උගුලේ අභ්‍යන්තරයට ගමන් කිරීමත් නොවැළැක්විය හැකි ලෙස ආර්ථික හා දේශපාලන කොන්දේසිවල සිරවීමත්ය. එහෙයින් IMF ලෝක බැංකු වැනි මූල්‍ය ආයතනවල ග්‍රහණයෙන් මිදුණු සැලසුම් සහගත, විධිමත්, ජනතාවාදී, සාධාරණ ආර්ථික ප්‍රතිපත්තියක් සකස් කළ යුතුය.

## 11. සමාජ සංවර්ධනය ඉලක්ක කරගත් නව අධ්‍යාපන ප්‍රතිපත්තියක්.

මෙරට පවතින්නේ සමාජීය අවශ්‍යතා ඉටු කළ නොහැකි, විෂමතාවයෙන් පිරි, යල්පැනගිය ආර්ථික ක්‍රමයකි. 1977 න් පසු පැවති සෑම ආණ්ඩුවක් විසින්ම අධ්‍යාපන ක්ෂේත්‍රයේ ප්‍රතිසංස්කරණ සිදු කළේ මෙම යල්පැනගිය, අසාධාරණ ආර්ථිකය පවත්වාගෙන යාම මූලික අරමුණ කරගනිමිනි. ඒ අනුව අධ්‍යාපනය ප්‍රමාණාත්මකව සහ ගුණාත්මකව බරපතල කප්පාදුවකට ලක් කෙරිණි. ශාස්ත්‍රීය විෂය කප්පාදුව, අධ්‍යාපනය වෙළඳභාණ්ඩයක් කිරීම, අධ්‍යාපනය මිලිටරිකරණයට ලක් කිරීම වැනි ප්‍රතිසංස්කරණ යෝජනා ගෙන එන්නේ එම පදනමෙහි පිහිටමිනි. යල්පැනගිය, අසාධාරණ ආර්ථිකයක් පවත්වාගෙන යාම වෙනුවට සමාජ සංවර්ධනය දිශානතිය කරගත් නව අධ්‍යාපන ක්‍රමයක් නිර්මාණය කළ යුතුය. අධ්‍යාපනය වෙළඳ භාණ්ඩයක් කිරීම, ශාස්ත්‍රීය විෂය කප්පාදුව, මිලිටරිකරණය පරාජය කළ යුතුය. පවතින ආර්ථික ක්‍රමයට අවශ්‍ය පරිදි අධ්‍යාපනය වෙනස් කිරීම සඳහා ඉදිරිපත් කළ කොතලාවල පනත වැනි අණපනත් වහා හකුළාගත යුතුය.

## 12. විවිධ රටවල් සමඟ අත්සන් කළ ජනතා ද්‍රෝහී ගිවිසුම් අහෝසි කිරීම.

මෙතෙක් පැවති සියලු ආණ්ඩු විසින් ඇමරිකාව, ඉන්දියාව, චීනය ඇතුළු අධිරාජ්‍යවාදී අතපෙවීම් සිදුකරන රටවල් සමඟ අත්සන් කළ සියලු යුධ හා ආර්ථික ගිවිසුම් පිළිබඳව ජනතා සංවිධාන සම්බන්ධ වූ යාන්ත්‍රණයක් මගින් පූර්ණ අධ්‍යයනයක් සිදුවිය යුතු අතර අවශ්‍ය රාජ්‍ය තාන්ත්‍රික මැදිහත්වීම් සිදුකරමින් සියලු ජනතා ද්‍රෝහී ගිවිසුම් අහෝසි කළ යුතුය.

## 13. විකුණා දමන ලද ජනතා දේපල නැවත පවරාගැනීම.

ඉඩම්, ගොඩනැගිලි, රාජ්‍ය ආයතන ඇතුළු ජනතා දේපල රැසක් පෞද්ගලිකකරණය කිරීම සඳහා දැනටමත් ක්‍රියාත්මක වෙමින් පවතින සැලසුම් වහා හකුළාගත යුතුය. පසුගිය දශක හතක කාලය පුරා මුග්ධ පාලකයන් විසින් විකුණා දමන ලද ජනතා දේපල අවශ්‍ය රාජ්‍ය තාන්ත්‍රික මැදිහත්වීම් සිදුකරමින් නැවත පවරාගැනීමට කටයුතු කළ යුතුය.

ஆட்சியாளர்களால் கடுமையான பொருளாதார, சமூக, அரசியல் நெருக்கடிக்குள் இந்நாட்டு மக்கள் மூழ்கடிக்கப்பட்டுள்ளனர். மக்கள் மீதான அந்த நெருக்கடியின் தாக்கம் மாபெரும் மக்கள் போராட்டமாக நாடு பூராவும் வெடித்துப் பரவியுள்ளது. இந்த ஆட்சியாளர்களின் வேலைத்திட்டத்தில் நெருக்கடிக்கான தீர்வு கண்ணுக்கெட்டிய தூரத்தில் இல்லை. நெருக்கடி தீவிரமாகி மக்கள் மீதான அழுத்தம் நாளுக்கு நாள் உக்கிரமடைந்து வருகிறது. நெருக்கடிக்கான தீர்வு ஆட்சியாளர்களிடம் இல்லாத போதிலும், அழுத்தத்திற்கு எதிராக செயற்படும் மக்கள் போராட்டத்தை தமது அதிகார திட்டத்திற்காக கொள்ளையிடுவதற்கான திட்டம் அவர்களிடம் உண்டு. அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்பதுடன், போராட்டத்தின் திசை சம்பந்தமாக பரவலான மக்கள் கருத்தாடலொன்றும், நோக்கும் இருத்தல் வேண்டும். அதற்காக அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் என்ற வகையில் இச்சந்தர்ப்பத்தில் நாம் முன்னெடுக்கும் போராட்டமானது கீழ்வரும் வெற்றிகளை பெற்றுக் கொள்ளும் வரை தொடர்ந்து முன்னெடுக்கபடல் வேண்டுமென நாம் முன்மொழிகிறோம்.

## 1. கோத்தாபய ராஜபக்'வை விரட்டுவதும் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதும்

மக்கள் கருத்திற்கு தலை சாய்த்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்' உட்பட மக்கள் துரோக அரசாங்கம் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும். பைத்தியம் பிடித்த சர்வாதிகாரியொருவனை உருவாக்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க வேண்டுடியதோடு, அதை அவசர நடவடிக்கையாகக் கருதி மேற்கொள்ளல் வேண்டும்.

## 2. மக்களிடம் அதிகாரத்தை ஒப்படைக்கும் புதிய அரசியலமைப்புச் சட்டம்.

ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட பொருளாதார, சமூக நெருக்கடிகளுக்குத் தீர்வு காண நடைமுறையிலுள்ள அரசியலமைப்புச் சட்டத்தினால் ஒருபோதும் முடியாது. எனவே, மக்கள் அபிலா'களை நிறைவேற்றக் கூடிய அரசியலமைப்புச் சட்டமொன்றை தயாரிக்க வேண்டும். அதற்காக பொது மக்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்று புதிய அரசியலமைப்பு சட்டத்தை தயாரித்து அதனை பரவலான மக்கள் கருத்தாடலுக்கு திறக்கப்பட்டு அங்கீகாரம் பெறல் வேண்டும். அந்த புதிய அரசியலமைப்பு சட்டத்தின் மூலம் பொருளாதார நியாயத்தன்மை, கல்வி, காதாரம் ஆகியன மக்களின் அடிப்படை உரிமைகளாக ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

## 3. அரசியல்வாதிகளால் கொள்ளையிடப்பட்ட செல்வத்தை மீண்டும் கைப்பற்றுதல்.

1977க்குப் பின்னர் இந்நாட்டை ஆட்சிய செய்த, அரசியல்வாதிகளாக செயற்பட்ட அனைவரினதும், அரசாங்கத்தில் மிக முக்கிய பதவிகளை வகித்த உயரதிகாரிகளினதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சம்பந்தமாக பக்கச்சார்ப்பற்றதும் முழுமையானதுமான விசாரணை நடத்தப்படடல் வேண்டும். கொள்ளையிட்ட செல்வத்தையும், சொத்துக்களையும் மீண்டும் கைப்பற்றல் வேண்டும். சொத்துக்களை கொள்ளையிட்ட அனைவருக்கும் தண்டனை வழங்க வேண்டும்.

## 4. படுகொலைகள் மற்றும் காணாமலாக்கள்களுக்கு நீதியை பெற்றுக் கொடுத்தல்.

ராஜபக்' உட்பட அரசியல் தலையீட்டுடன் கடந்த சில தசாப்தங்களாக நடத்தப்பட்ட அனைத்து மனிதக் கொலைகள், ஆள் கடத்தல்கள், காணாமலாக்கல்கள் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டியதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுப்பதோடு, குற்றவாளிகளுக்கு தண்டனையும் வழங்கப்படல் வேண்டும்.

## 5. நட்பு நிறுவனங்களினால் செலுத்தத் தவறிய வரிப் பணத்தை மீண்டும் அறவிடுதல்.

2015லிருந்து 2019 வரை இந்நாட்டில் உயர் வருமானம் பெறும் நிறுவனங்கள் செலு-

த்தத் தவறிய வரி ரூ. 41440 கோடியாகும். 2020ல் மாத்திரம் ரூ. 1050 கோடி வரி செலுத்தத் தவறியுள்ளன. சீனி வரி மோசடியினால் ரூ. 1600 கோடியை அரசாங்கம் இழந்துள்ளது. இவை சில உதாரணங்கள் மாத்திரமே. செலுத்தத் தவறிய வரி சம்பந்தமாக முழுமையான விசார-ணை நடத்தப்படல் வேண்டும் என்பதுடன், செலுத்தத் தவறிய வரிப் பணத்தை அறவிட நடவ-டிக்கை எடுத்தல் வேண்டும். இந்நாட்டு மொத்த வரி வருமானத்தில் 85 வீதம் மறைமுகமான வரியாக பொதுமக்களிடமிருந்து அறவிடப்படுவதுடன், வருமானம் பெறும் பெரு நிறுவன உரி-மாயாளர்கள் ஒட்டுமாத்த வரியில் 15 வீதத்தை மாத்திரமே செலுத்துகின்றனர். இது முரணாக இருப்பதுடன் பெரு நிறுவனங்களின் வரியை 80 - 85 வீதமாக ஆக்கி, மறைமுக வரியை 15 - 20 வீதமாக குறைத்தல் வேண்டும். இவ்வாறு நேரடி வரியை அறவிடுவதற்காக முறையான வரிக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தபடல் வேண்டும்.

## 6. நட்பு நிறவனங்களினால் கொள்ளையிடப்பட்ட மக்கள் செல்வத்தை மீண்டும் சுவீகரித்துக் கொள்ளல்.

இந்நாட்டு முன்னணி நிறுவனங்கள் சில வரலாற்றில் ஒவ்வொரு வருடமும் பெற்ற வருட-ாந்த வருமானம் பல மடங்காக அதிகரித்து 2020ல் அதிக இலாபம் பெற்றுள்ளன. பங்குச் சந்தையில் பதிவு செய்துள்ள நிறுவனங்களில் அதிக வருமானம் பெறும் 100 நிறுவனங்கள் 2020ல் 200 பில்லியன் சுத்த இலாபம் பெற்றுள்ளன. இந்நாட்டின் 09 பெரும் பணக்கார நிறுவன-ங்கள் மாத்திரம் 2020ல் பெற்ற வருமானம் 891 பில்லியனாகும். 2020ல் அதிக இலாபம் பெற்ற நான்கு நிறுவனங்களின் சொத்துக்கள் ஏற்கனவே ஒரு ட்ரிலியனையும் தாண்டியுள்ளன. 2020 என்பது கோவிட் பெருந்தொற்று காரணமாக வருமானத்திற்கு வழியில்லாத இந்நாட்டு மக்களில் குறிப்பிட்டளவு பெரும்பாலான மக்கள் வறுமையின் கீழ் மட்டத்திற்கே தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிலையில், சில நிறுவனங்கள் மாத்திரம் அதிக இலாபம் பெற்றமையும், ஒட்டுமொத்த சமூகத்-திற்கும் கிடைக்க வேண்டிய செல்வம் ஒரு சில நபர்களிடம் குவிந்திருப்பதும் சம்பந்தமாக முறையான விசாரணை நடத்தப்படல் வேண்டும். சமூகத்தின் அந்தப் பணத்தை தேவைக்கு ஏற்றவாறு மீண்டும் மக்களின் தேவையை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்துவது முக்கியான காரணியாகக் கருதி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 7. விசாரணைக்காக மக்கள் ஆணையம்.

மேற்படி விசாரணைக்காக நிறைவேற்று அதிகாரமும், சட்டவாக்கச் சபையும் தலையிட்டு தயாரிக்கப்படும் ஜனாதிபதி - பாராளுமன்ற ஆணைக்குழு போன்ற கட்டமைப்புகள் மீது தொடர்ந்-தும் நம்பிக்கை வைக்க முடியாது. ஆகவே, அதற்காக வெகுமக்கள் ஆணைக்குழுவொன்றை நியமித்தல் வேண்டும். போராட்டத்தோடு கிராமங்கள், நகரங்கள், வேலைத்தளங்கள் மட்டத்தில் கட்டியெழுப்பப்படும் மக்கள் அமைப்புகள், ஏற்கனவே உள்ள தொழிற்சங்கங்கள், வெகுசன அமைப்புகள், சிவில் அமைப்புகள், மாணவர் அமைப்புகள், விவசாய - மீனவர் சங்கங்கள் மற்றும் ஏனைய பிரதேச அமைப்புகளின் பிரதிநிதித்துவத்தை தேர்ந்தெடுத்து இந்த பொதுமக்கள் ஆணைக்குழுவை நியமிக்க வேண்டியதுடன், சகல விசாரணைகளுக்காகவும் இந்த ஆணைக்-குழுவிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

## 8. அத்தியாவசிய பொருட்களின் விலைகளை நிர்ணயிப்பதற்காக மக்கள் பொறிமுறையொன்று.

குறிப்பிட்ட சில நிறுவன வலையமைப்பின் தேவைகளுக்கேற்பவே எரிபொருள், எரிவாயு, பால்மா, அரிசி போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அடிக்கடி உயர்த்தப்படுகி-ன்றன. அது மக்களின் அடிப்படை உரிமையை மீறும் அநீதியான செயற்பாடாக இருப்பதுடன், விலைகளை நிர்ணயிப்பதற்காக நிறுவனங்களின் கைகளில் இருக்கும் ஏகபோக அதிகாரத்தை

இரத்துச் செய்தல் வேண்டும். அதற்குப் பதிலாக தொழிற்சங்கங்கள், வெகுசன அமைப்புகள், பெண்கள் அமைப்புகள், விவசாய - மீனவர் அமைப்புகள், மாணவர் அமைப்புகள் உட்பட பொதுமக்கள் நேரடியா பங்களிக்கும் பொறிமுறையொன்றின் மூலம் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் நிர்ணயிக்கப்படும் புதிய பொறிமுறையொன்றை தயாரித்தல் வேண்டும்.

## 9. மக்களுக்கு நிவாரணம் வழங்கும் துரித வேலைத்திட்டமொன்று.

அத்தியாவசிய உணவுப் பொருட்கள், எரிபொருள், எரிவாயு உட்பட பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தட்டுப்பாடுகள் மற்றம் தாங்கிக் கொள்ள முடியாத அளவிற்கு விலைகள் அதிகரிக்கின்றமையினால், மக்கள் வாழ்வு கடுமையான நெருக்கடிக்குள் வீழ்ந்துள்ளது. இதற்காக மக்களுக்க நிவாரணம் வழங்கக் கூடிய துரித வேலைத்திட்டமொன்று தேவைப்படுவதுடன், வாழ்க்கைச் செலவை உடனடியாகக் குறைத்தல் வேண்டும். கடன் தவணைகள் வெட்டப்பட வேண்டியதுடன், வாழ்க்கைச் செலவிற்குப் போதுமானளவில் மக்களின் வருமானம் மற்றம் சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டும்.

## 10. நீதியான புதிய பொருளாதார முறை.

1977 பின்னர் இந்நாட்டில் ஆட்சி செய்த சகல அரசாங்கங்களினதும் பொருளாதாரமமானது சர்வதேச நாணய நிதியம் (ஐஆகு), உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய நிதி அமைப்புகளின் வழிகாட்டல்கள், பரிந்துரைகள் மற்றும் நிபந்தனைகளின்படிதான் வழிநடத்தப்பட்டது. எனவே, தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு தற்காலிக தீர்வு காண்பதற்காக சர்வதேச நாணய நிதியம் (ஐஆகு) போன்ற அமைப்புகளின் தயவை நாடுவது மீண்டும் கடன் பொறியில் சிக்குவதாகத்தன் இருக்கும். ஆகவே, ஐஆகு, உலக வங்கி போன்ற நிதி நிறுவனங்களின் பார்வையிலிருந்து மீண்ட திட்டமிட்டதும், முறையானதுமான மக்கள் சார்ப்பு பொருளாதாரக் கொள்கையொன்று தயாரிக்கபடல் வேண்டும்.

## 11. சமூக அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட புதிய கல்விக் கொள்கை.

இந்நாட்டில் நடைமுறையில் இருப்பது சமூகத் தேவைகளை நிறைவேற்ற முடியாத முரண்பாடுகள் நிறைந்த காலாவதியான பொருளாதார முறையாகும். 1977ன் பின்னர் ஆட்சியிலிருந்து ஒவ்வொரு அரசாங்கமும் காலாவதியானதும் அநீதியானதுமான பொருளாதார முறையை முன்னெடுத்துச் செல்வதை அடிப்படை நோக்கமாகக் கொண்டே கல்வித் துறையில் மறுசீரமைப்புகளை செய்தன. அதன்படி, கல்வி போதுமானளவில் மற்றும் தரத்தில் கடுமையான வெட்டுகளுக்கு உட்படுத்தப்பட்டது. கல்வி பாடவிதானங்களில் வெட்டு, கல்வியை வர்த்தகப் பண்டமாக்கியமை, கல்வியை இராணுவமயமாக்கியமை போன்ற மறுசீரமைப்பு முன்மொழிவுகள் அதனால்தான் கொண்டுவரப்பட்டதும் அதன் அடிப்படையில்தான். காலாவதியானதும்அநீதியானதுமான பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக, சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட கல்வி முறையொன்றை நிர்மாணத்தல் வேண்டும். கல்வி வர்த்தகப் பண்டமாக்கப்படல், கல்வி பாடவிதானங்கள் வெட்டப்படுதல், இராணுவமயமாக்குதல் போன்றவற்றை தோற்கடித்தல் வேண்டும். நடைமுறையிலுள்ள பொருளாதார முறைக்குத் தேவையானவாறு கல்வியில் மாற்றங்கள் செய்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள கொத்தலாவல சட்டமூலம் போன்ற சட்டதிட்டங்களை உடனடியாக சுருட்டிக்கொள்ளல் வேண்டும்.

## 12. பல்வேறு நாடுகளுடன் ஒப்பமிடப்பட்ட மக்கள் துரோக ஒப்பந்தங்களை ஒழித்தல்.

இதுவரை நிலவிய சகல அரசாங்கங்களினாலும் அமெரிக்கா, இந்தியா, சீனா உட்பட ஏகாதிபத்திய தலையீடுகளை மேற்கொள்ளும் நாடுகளுடன் ஒப்பமிடப்பட்ட சகல யுத்த, பெ-

ாருளாதார ஒப்பந்தங்கள் தொடர்பில் மக்கள் அமைப்புகள் பங்கேற்கும் பொறிமுறையொன்றின் மூலம் ஒழிக்கப்படல் வேண்டும்.

**13. விற்பனை செய்யப்பட்ட மக்கள் சொத்துக்களை மீண்டும் சுவீகரித்தல்.**

காணிகள், கட்டிடங்கள், அரச நிறுவனங்கள் உட்பட மக்கள் சொத்துக்கள் பலவற்றை தனியார்மயமாக்குவதற்காக ஏற்கனவே தயாரித்துள்ள திட்டங்களை உடனடிய சுருட்டிக் கொள்ளல் வேண்டும். கடந்த ஏழு தசாப்தங்கள் பூராவும் அறிவீன ஆட்சிகளினால் விற்கப்பட்ட மக்கள் சொத்துக்களை, அவசியமான ராஜதந்திர தலையீட்டை மேற்கொண்டு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.




**අන්තර් විශ්වවිද්‍යාලයීය ශිෂ්‍ය බලමණ්ඩලය**

**அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்**

**INTER UNIVERSITY STUDENTS FEDERATION**

**Students' Union, University of Sri Jayawardhanapura, Gangodawila, Nugegoda, Sri Lanka**

**E-mail - media.iusfsl@gmail.com Facebook - https.//www.facebook.com/iusfsrilanka/**

**Tel - +9471 - 648 78 12**